[2010 நவம்பர் 12

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 9-55

5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010—2011, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதமும் பதிலுரையும். பேரவை விதி 189, sub-clause (3) இன்படி இன்று விவாதமும் பதிலுரையும் முடிக்கப்பெற்று பிற்பகல் 1-30 மணிக்குள் மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மனதில் கொண்டு தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் உரையை முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருமகனார் அவர்கள் 2010-2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை மதிப்பீடுகளுக்கு இம்மாமன்றம் இசைவளிக்க வேண்டுமென்றும் மொத்தம் 3,607 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்றும், இதில் 2,168 கோடியே 58 இலட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை கடன்